அதிர்ஷ்டம்

கதை, பாட்டு, ஸீனரியோ, வசனம், டைரக்ஷன் :

S. D. S. யோகி

*

மியூஸிக் டைரக்ஷன், பின்னணி சங்கீதம் :

சர்மா பிரதர்ஸ்

*

எடிட்டிங் :

டிக்ரூஸ்

*

ஸ்டுடியோ :

நியூடோன்

*

முக்கிய நடிகர்கள் :

சூர்யா	சூர்யகுமாரி
தங்கம்	Miss செல்லம்
ஸ்வர்ணம்	T. S. தமயந்தி
ராக்காயி	சகுந்தலா
லிங்கம்	V. V. சடகோபன்
ஜம்பு	கொத்தமங்கலம் சுப்பு
லாயர் சோமநாத்	M. N. ஸ்ரீநிவாஸன்
அஸிஸ்டெண்ட்	K. R. கிருஷ்ணய்யர்
ராக்கன்	C. பஞ்சு
பப்ளிக் பிராஸிக்யூட்டர்	V. S. கிட்டப்பா
மார்வாடி	Rm. மெய்யப்பா
சப் இன்ஸ்பெக்டர்	கணபதி பட்
ஜட்ஜ்	ரெங்காச்சாரியார்
தியாகு	T. S. தியாகராஜன்
அழகு	V. அழகப்பன்

இன்னும் பலர்

LUCK

SYNOPSIS

When his car crashed the millionaire died. He left a will. Years back his child Surya had been kidnapped. If found she was to inherit all the millions; if not a certain Jambulingam and Swarnam were to get them.

Somanath, the dead man's lawyer, had a daughter named Swarnam. If he could find a Jambulingam and marry him to his daughter all the money would come under his control. The scheming lawyer managed to get hold of a man with the necessary name.

The real inheritors were students of the same college. V. J. Lingam and his beloved friend Swarnam passed out of their college. Lingam swelled the ranks of the desperate unemployed and Swarnam became a junior under Somanath; later V. J. Lingam became an assistant to the other Jambulingam.

She came upon the dead man's will accidentally; with it she fled to V. J. Lingam in spite of the efforts of Somnath and his daughter to prevent her doing so.

The lawyer then tried another trick. He spoke fair words to V. J Lingam and brought him back to his house. There the lawyer's daughter made love to Lingam but he repelled her advances. She then created a scene

alleging that Lingam had violated her. Lingam is tried for the offence.

Meanwhile, the missing child Surya—who had been kidnapped by one Chellam—wanders along the streets begging. Round her neck was a chain with a locket containing a picture of her dead father. It had been given to her by Chellam on her death bed

The police suspect that she has stolen the chain from somebody and arrest her. The Inspector, however, recognises the portrait of the dead man and guesses that the child is the heir to the riches He brings her to court where Lingam is being tried for the offence of rape . . .

The rest on the screen



கடவுள் துணை.

அதிர்ஷ்டம்

கதைச் சுருக்கம்

சர்வம் காதல் மயம் ஜகத்

கோடீஸ்வரரென்ருல் மோட்டார் நொறுங்கும்போது தூரத் தூக்கிவைத்துவிட்டு நொறுங்குமா என்ன? அதனுல் நமது கோடீஸ்வரரும் மோட்டார் விபத்தில் சிக்கி, சொல்லாமல் கொள்ளாமல் எமனிடம் சென்று விட்டார். ஆனுல் அந்த மனுஷர் ஏதோ ஒரு உயிலை எழுதி வைத்திருந்தார். கோடீஸ்வரருக்கு சூர்யா என்ருெரு பெண் குழந்தை இருந்தது. சிறு வயதிலேயே அது எங்கோ காணமற் போய்விட்டது. அது கண்டுபிடிக்கப்பட்டால், சொத்தெல்லாம் அதற்குச் சேரவேண்டும்; இல்லாவிட்டால் யாரோ ஒரு ஜம்புலிங்கமும் ஒரு ஸ்வர்ணமும் விவாகம் செய்துகொண்டு அந்தச் சொத்தைப் பெறவேண்டும் என அதில் குறிக்கப்பட்டிருந்தது.

இந்தவருக்கு சோமநாத என்ருெரு வக்கீல். அவருடைய பெண்ணின் பெயரும் ஸ்வர்ணம். ஆகவே உயிலைப் பார்த்ததும், வக்கீல் மனதில் ஒரு யோசனை தோன்றியது. ஒரு ஜம்புலிங்கத்தைத் தேடிப் பிடித்துவிட்டால் அவ்வளவு சொத்தும் தனக்கு வந்துவிடும் என்று கனவு கண்டா

ந்தவர். ஆனாலும் சூர்யாவின் நினைவு அவருக்கு நடுநடுவே தோன்றிக் கொண்டிருந்தது. ச்சு! இத்தனை வருஷம் காணாமற்போனவள் இனியா வரப்போகிறாள் என்று சமாதானப் படுத்திக்கொண்டு ஜம்புலிங்கத்தைத் தேடப் புறப்பட்டார்.

உண்மை ஜம்புலிங்கம்—வி. ஜே. லிங்கம் என்ற பெயருடனும், ஸ்வர்ணம்—தங்கம் என்ற செல்லப் பெயருடனும் காலேஜில் படித்து வந்தனர். அவர்களிடை நேசம் வளர்ந்து காதலாக மாறியது. தமக்கு வரப்போகும் கோடிக் கணக்கான பெருஞ் செல்வத்தைப் பற்றி அவர்களுக்கு ஒரு சிறிதும் தெரியாது.

சிற்க, சோமநாத்தும் அவரது ஆளும் ஒரு ஜம்புலிங்கத்தைப் பிடித்துக் கொண்டு சென்னைக்கு வந்தார்கள். ரொம்ப சுலபமாக இதை ஒரு வரியில் எழுதி விட்டோம். ஆனால் அவர்கள் போய் வருமுன் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. மோட்டார் 'இடக்கு' செய்து விட்டது. ஜம்புலிங்கமும், அவனது தோழன் ராக்கனும் சென்னையை முன்பின் பார்த்ததில்லை. ஆகவே தமாஷிற்குக் கேட்க வேண்டுமா?

உண்மை லிங்கமும், தங்கமும் பரீட்சை பாஸ் செய்து விட்டு வேலைக்காக அலைந்தார்கள். வெகு சிரமப்பட்டார்கள். வயிற்றுப் பசி தாங்காது லிங்கம் தூக்கிட்டுக் கொள்ளப் போனான். அவனைத் தங்கம் காப்பாற்றினாள். இருவரும் சோமநாத் என்ற வக்கிலிடமே வேலைக்கு அமர்ந்தார்கள்.

தங்கம் வக்கிலுக்கு உதவி ஆனாள். லிங்கம் போலி கோடீஸ்வர ஜம்புலிங்கத்திற்கு உதவி ஆளானான். இந்த நிலைமையில்தான் வக்கில் வீட்டில் காதல் மயமாக ஆகிவிட்டது. கிழட்டு வக்கிலுக்குத் தங்கத்தின்மீது மோக மேற்பட்டது. தங்கத்திற்கோ லிங்கத்தின்மீது இணைபிரியாக் காதல். சோமநாத்தின் மகள் ஸ்வர்ணம் ஜம்புலிங்கத்தைக் காதலிப்பது போல் நடித்துக் கொண்டு, உண்மையில் வி. ஜே. லிங்கத்தைத் தன் வலைக்குள் போட முயன்று கொண்டிருந்தாள். இது இப்படியிருக்க, வேலைக்காரி ராக்காயி, ராக்கனைக் கண்டு சொக்கி விட்டாள்.

ஒரு நாள் தங்கம் வக்கிலின் ரிக்கார்டுகளைக் கிளறிக் கொண்டிருந்தாள். அவளது திருஷ்டியில் கோடீஸ்வரரது உயில் சிக்கிவிட்டது. சூர்யா கிடைக்காவிட்டால், தானும் லிங்கமும் கோடீஸ்வரர்களாகக்கூடிய சான்ஸ் இருப்பதை அறிந்தாள். உயிலை எடுத்துக்கொண்டு லிங்கத்திடம் ஓடினாள். அவளைத் தடுக்க சோமநாத் முயன்றார். ஆயினும் தங்கம் தப்பி விட்டாள். சோமநாத், லிங்கத்தை அழைத்து வந்தார் வஞ்சகமாக அவரது வீட்டில் வக்கில் மகள் ஸ்வர்ணம் அவனைத் தன் வசப்படுத்த எவ்வளவோ முயன்றாள். லிங்கம் அவளை வெறுத்தான். உடனே ஸ்வர்ணம் 'ஐய்யய்யோ! கெடுக்கறான்டோய்!' என்று கத்திவிட்டாள். லிங்கம் சிறைப்பட்டான். உயில் போனது என்றதும் போலி ஜம்புவிற்குப் பைத்தியம் பிடித்து விட்டது.

இந்த நிலைமையில் சூர்யா எங்கிருக்கிறாள்? அவள் சிறு குழந்தையாக இருக்கும் போது கோடீஸ்வரர்மீது ஆத்திரங் கொண்ட செல்லம் என்பவள் அவளைத் திருடிக்கொண்டு போய் விட்டாள். அவள் வீட்டில் அவளது மகன் தியாகுவோடு வளர்ந்து வந்தாள் சூர்யா. செல்லம் சாகக்கிடந்தாள். அப்பொழுது சூர்யாவின் பூர்வ கதையை எடுத்துக் கூறலானாள். சூர்யாவின் தந்தையின் பெயரைக் கூறுமுன் அவளது ஆவி அவளது உடலிலிருந்து பிரிந்து விட்டது.

தியாகுவும், சூர்யாவும், தெருப் பாடகன் அழகுவும் சென்னைக்குப் பிச்சை எடுக்க வந்தனர். தியாகு கோவ்வாய்ப் பட்டான். சூர்யாவின் கழுத்தில் பழைய அடையாள முள்ள தங்கச் செயின் இருந்தது. அதை அவன் விற்கப் போனான்.

ஸ்வர்ணத்தை பலாத்காரமாக—மானபங்கம் செய்த தாக, ஸிங்கத்தின் மீது குற்றம் சாட்டப்படுகிறது. சூர்யா திருடிவிட்டதாக போலீசாரால் பிடிக்கப்பட்டு, பாதோ பஸ்த்தில் வைக்கப்படுகிறாள். ஜம்புவிற்கு சித்தப்ரமை பிடிக்கிறது.

அதிர்ஷ்டவசத்தால் ஏற்பட்ட இவைகளெல்லாம் என்ன வாக முடிவடைகின்றன? ஆதியில் அதிர்ஷ்டத்திற்கு திருஷ்டி பங்கி யிருந்தது. ஆனால் கடைசிவரையில் அப்படித் தானா? இவைகளை எல்லாம் வெள்ளித் திரையில் கண்டு மகிழ்ச்சியும், அதிர்ஷ்டமும் அடைவீர்கள்.



10

உ.

கடவுள் துணை.

அதிர்ஷ்டம்

பாட்டுகள்

1. ஸிங்கம் :— (சடகோபன்)

வருவாளோ—மாட்டாளோ
மாலை நேரம் மீறுதே
திருவினு மினியாள்—தேனின் மொழியாள்
தீனன்—மோஹம்—தீர—வே
உருவம் தேயும்—உயிரும் தீயும்
ஓர் விநாடி யோர்—யுகமாய் நீளும் (வரு)

வானத்தில்—மாமதி—நாடுதே—கூடுதே
வையத்தி—லேயிருள்—தேடுதே—நீடுதே
வாச மேவு மலர் யாவு மூடுதே
மனது குலைய சோர மீறுதே (வரு)

அனமோடு அனமாக ஜோடியாய்
அலையோடு அலையாகவே மோதியாய்
கனமோஹன குஷாலாய் மாலாய்
காதலிலே ஜோராய்—ஆடுதென்
காதலி காணேனே, (வரு)

2. வண்டிக்காரன் :— (எஸ். எஸ். மணி)

பட்டணத்து வண்டி—மோட்டார் வண்டி—இங்கே
பட்டாக் கழன்றதே நொண்டி வண்டி
குட்டப் பெருச்சாளி குண்டுக் காளே—நம்ப
குர்தாணி மூக்கையன் சொந்தக் காளே—ஹே!

தானே ஞனே தானே தானே ஞனே—தானே
தாஞத ஞதந்தி ஞதந்தி னே—ஹே!

காரக்கட்டி மாடிழுக்க மாட்டக்கட்டி நானிழுக்க
கடகடங்கவும் காருங்கிளவும் சடசடங்கவும் சவுக்கடிக்கவும்
தாருக்குச்சி போட்டுக்குத்தி-காதெப் டுர்ரி ட்ரிபோ ட்ரிபோ
சத்தமிட்டு வால்முறுக்கி கவுண்டக் குப்பனும்—
கவுண்டக் குப்பனும்
தாணி யெல்லாம் சுத்து வேனே—ஹே!

3. ஸிங்கம் :— (சடகோபன்)

எனது காதல் மோஹன மானே
என்னுயிர்ச் செந் தேனே—மானே
என்னுயிர்ச் செந் தேனே

தங்கம் :— (செல்லம்)

இனிதா மதனசிங் காரவை போகா
ஏக போகமாய் நீயு நானுமாய்
எனது காதல் மோஹன தீரா
என்னுயிர்க் காதரா

ஸிங்கம் :—

பூவோடு வண்டு குலாவல் போல
பாவோடு ராகம் பராவல் போல
பாடுவோம் கூடி யாடுவோம்

தங்கம் :—

காதலின் செடியில் நாமிரு மலராம்
காதலின் கனியில் நாமிரு சுளையாம்

ஸிங்கம் :—

காதலின் விசைநீ காதலின் குரல்நான்
காதலின் உயிர்நீ காதலின் உடல்நான்

இருவரும் :—

காதலின் வாரிதி லேகாம்
கானிவுட னேகாம்
கதிபெறு வோம்நாம்—கமான் (Come on
எமது காதல் மோஹன சாரம்
எம்முயிர்க் காதாரம்—போகம்
எம்முயிர்க் காதாரம்

4. ஐம்பு :— (கொத்தமங்கலம் சுப்பு)

எத்தம் இறைக்கிற சேத்தியிலே தண்ணி
பாத்தியிலே பாயுதே—சோக்கா
கோத்தி வயல் மேயுதே

நாக்கன் :— (வி. பஞ்ச)

சேத்துக்குளே சோளம் பூத்துக்கதிர் சாய்க்கும்
கோத்தி பறுவடையே—சொக்கா
கோத்துக் குலாவு மையே

ஜம்பு :—

தண்ணிமேலே பரியப்பாரு
பரியிமேலே கயித்தப்பாரு
கயித்தச்சுந்தர மாட்டைப்பாரு
மாட்டைச்சுந்தர மாட்டைப்பாருங்க—சொக்கா
மாட்டை யோட்டும் மன்னன் பாருங்கோ

நாக்கன் :—

பரியத் தூக்கிக் கயிறிழுக்க
கயித்தத் தூக்கி நுகயிழுக்க
நுகத்தத் தூக்கி மாடிழுக்க
எத்தமேறி இறங்கும் போதிலே—சொக்கா
பாத்தி யெல்லாம் தண்ணி பாயுதே—ஜோர்—ஜோர்

இருவரும் :—

எத்தம் இறைக்கிற கேத்தியிலே தண்ணி
பாத்தியிலே பாயுதே—சொக்கா
கோத்தி வயல் மேயுதே.

5. சிங்கம்:— (சடகோபன்)

மாலை மோஹன மாங்காலம்
மாமதன் லீலைக் கவுசலம்

தங்கம்:— (செலவம்)

கோல மாமலர் சோலை மாருத
லீலை மேவுது—காணுமோ

சிங்கம்:—

வாடி—மலர் வாயிதழ் மோஹனம்
நாடி—ஓர் முத்தம் தாராயோ

தங்கம்:—

பாடி யாடுவோம் தேடி யோடுவோம்
கூடி யூடியே கொண்டாடுவோமே

சிங்கம்:—

ஸ்ருங்கார லீலையா லேககமாக
சீராய் ஜோராய் சேர வாருமே

தங்கம்:—

சேர வாருமே

சிங்கம்:—

சேர வாருமே

தங்கம்:—

சேர வாருமே

இருவரும்:—

சேர வாருமே—சீராய்—ஜோராய் (மாலை)

6. சிங்கம்:— (சடகோபன்)

அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில்லாமல்
[illegible]
செப்பிடு வித்தைகளாடத் தெரிந்தோ மில்லைத்
தடமுலை வேசையராகப் பிறந்தோ மில்லைச்
சனியான இங்கிலீஷை விட்டுப் பெண்க
ளிடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை
என்ன சென்ம மெடுத்துலகில் இருக்கின்றோமே,

7. ஏலக்கடைப்பாட்டு   (ஆர். பழநிச்சாமி ஐயர்)

சீமாங்க சீமாட்டிங்க சீக்கிரமே வாங்க இங்கே
சின்னப்பணம் பெரிய சாமான் சீக்கிரமே வாங்க இங்கே
சீக்கிரமே சீக்கிரமே சீக்கிரமே வாங்க இங்கே
ஜப்பானும் ஜர்மனியும் குப்பாயம் போட்டதுங்க
—காலணு
—ஆறணு

ஆறணு ஒருதடவை இருதடவை—எட்டணு
எட்டணு ஒருதடவை எட்டணு இரு தடவை-பத்தணு
பத்தணு பத்தணு பத்தணு ஒரு தரம்
ஒருதரம் இருதரம் பத்தணு இருதரம்
பத்தணு மூணுதரம் ஸோல் டவுட்
சின்னக் கிலுகிலுப்பை சிங்காரக் கிலுகிலுப்பை
ஜிம் ஜிம்   ஜிம் ஜிம்   ஜிம் ஜிம்   ஜிம் ஜிம்
ஜிம் ஜிம்   ஜிம் ஜிம்   ஜிம் ஜிம்—ஜிம்   [மை
சின்னதொரு வன்னப்பொண்ணு சிங்காரமான பொம்
—காலணு
—அரையணு

அரையணு ஒருதடவை இருதடவை—எட்டணு
எட்டணுவா ஒரு ரூபாய்—இரண்டு ரூபாய்
மூணுரூபாய் நாலுரூபாய் அஞ்சுரூபாய் பத்துரூபாய்
பத்துரூபாய் முப்பதுரூபாய் நாப்பதுரூபாய் ஐம்பது
ரூபாய்

ஐம்பது ஒருநூறு இருநூறு மூன்னூறு
மூன்னூறு நானூறு ஐநூறு அறுநூறு
அறுநூறு எழுநூறு எண்ணூறு தொண்ணூறு
கோ கோ ஆயிரம் கோ கோ கோ ஆயிரம்

எஸ் எஸ் எஸ் ஆயிரம் எஸ் எஸ் எஸ் ஆயிரம்
ஆயிரம் ஒருதரம் ஆயிரம் இருதரம்
மூன்று தரம் ஆயிரம் ஸோல் டவுட்

8. சூர்யா:—   (சூர்ய குமாரி)

ஐயா! சிறு பெண் ஏழை யென்பால்
மனமிரங் காதா—ஐயா.
மனமிரங் காதா—உம்
மனமிரங் காதா
அந்தோ வயிறு வாடுகின்றச்
சாறு வாராதா—தெய்வம்
சோறு தாராதா

நாலைந்துநாள் பட்டினியால் வாடுகின்றேனே
நான் வாடுகின்றேனே
ஐயோ வாடுகின்றேனே—இந்த
ஞாலமெல்லாம் சுற்றிவழி தேடுகின்றேனே—எந்தன்
கால் கடுக்கக் கண்ணடைக்கக் காது கேளாதே   (அந்)

காக்கைக்கொரு கவளமிட்டுக் கூவிடுவீரே—கெட்ட
நாய்க்குமொரு எச்சிலிலை தானிடுவீரே—ஒரு
போக்குமில்லாச் சிறுமியென்பால் கருணைவாராதா (அந்)

சத்திரமாம் சாவடியாம் தருமமென்பீரே—ஏழை
தனித்துவந்தால் விதிவிதிகொண் கருமமென்பீரே
சித்தமிரங் காதஜென்மம் வீணாய்ப் போகாதோ (அந்)

சூர்யா:—   (சூர்யகுமாரி)

சல்லோ ஜம் ஜம் ஜம் ஜம் ஜமா ஜமா ஜமா
ஜால லீல ஜாலமே—கோல லால லோலமே
மேலு மேலு மாறு மாறும்—ஜால லால லீலமே
[சல்லோ]

(14)

தியாகு :— (டி. எஸ். தியாகராஜன்)

கல் கல கல கல் கல் கல் கல் கல் கல்
ஜல ஜல ஜல ஜல ஜல ஜல ஜல—ஜல் ஜல் ஜல் ஜல்
ஜல் ஜல்

ஜாலன ஜாலன ஜாலன ஜல்
ஜீவன ஜீவன ஜீவன ஜில்
தாம் தாம் தமா—தீம் தீம் திமீ—த்ராம்-த்ராம்-த்ரமா
த்ருமி த்ருமி த்ருமி த்ருமி—தரிஜம் தரிஜம்—ததனும்
ததனுட

ததனும் ததனும்—ததிகின ததனும்
ஹதனும் திரிஜா—ஹதனும் தரிஜனு
ஹதனும் தரிஜா— தகு திமி திமி தீம்—என
தாளம் போடவும் ராகம் பாடவும்
மேளங் கூடவும் நாட்டியமே [சலோ.]
தாளம் போட ராகம் பாட மேளங்கூட நாட்டியமே

அழகு :— (அழகப்பன்)

காலோடு கால்மாறி யாடினன்—நட
ராஜனும் மாமயில் மீதிலே—சிவ
பாலனும் காளியன் சாகவே—தெய்வ
கோகுல கிஸகு மாரனும்—கனி
காமனரும் சோமனரும் தாமனருமே
காலமாட ஞாலமாட மேதுமாடவே

மூவரும் :—

ககன மணிகள் தாமாட—கமல முதல மலராட
வானாட மானாட மீனாடத் தானாட நானாட மஹா
[சலோ]

சூர்யா :—
ஜிம் ஜிமி ஜிமி ஜிம் ஜிமி ஜிமி ஜிம் ஜிமி ஜிமி—ஜிம்

தியாகு :—
ஜம் ஜம ஜம ஜம் ஜம ஜம ஜம் ஜம ஜம—ஜம்

அழகு :—
கம் கம கம கம் கம கம கம் கம கம—கம்

சூர்யா :—
சலோ ஜமா ஜம் ஜம்

அழகு :—
சலோ சலோ ஜம் ஜம்

தியாகு :—
சலோ சலோ ஜிம் ஜிம்

சூர்யா :—
சலோ ஜம்-ஜம் ஜம் ஜம்

மூவரும் :—
சலோ ஜிம் ஜிம் ஜிம் ஜிம் [சலோ ஜம்]
சலோ ஜமா ஜமா ஜமா ஜமா ஜமா ஜமா ஜமா

10 சூர்யா :— (சூர்யகுமாரி)

ஐயகோ பேதையென் மீதிரங் கீரோ
யாராகிலும் பொருளுதவி செய்யீரோ
தாயோடு கோயினுல் சோதரன் வாட
சோகம் தீர வே
தாய்தம ருறவினர் தழுவிட வாழும்
தாயவரே பொருளுதவி செய்யீரோ

11 சூர்யா :— (சூர்யகுமாரி)

ஏழை மீது பாபூராம் பழியோ
ஏது செய்கு வேன்—நான்
ஏது செய்கு வேன்

6

பாழாச்சே பழி மேலாச்சே
பாதகி எனவே போச்சே
பாவை என் தூய்மை வீணாச்சே
தாயில்லை தந்தையுமில்லை
தமியாளோ அனாதை
தம்பியும் நோய்வாய்ப் பட்டானே—நா—
தாழ் நிலை யுற்றேனே

2 சூர்யா :— (சூர்யகுமாரி)

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே—நாம்
ஆனந்தசுதந்திரம் அடைந்துவிட்டோமென்று—ஆடு
எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றும் தொலகின்ற காலம் வந்ததே

தியாகு :— (டி. எஸ். தியாகராஜன்)

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
—வீணில
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்

அழகு :— (அழகப்பன்)

நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம்—இது
நமக்கே உரிமையா மென்ப தறிந்தோம்

மூவரும் :—

பூமியி லெவர்க்குமினி அடிமை செய்யோம்—பரி
பூரண னுக்கே அடிமை செய்து வாழ்வோம்